**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 02.03.2026</u>**

**OS.02/2021**

**வா.சா.1 திரு.மாரி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது அப்பா பெயர் என்ன என்றால் செல்லக்கவுண்டர். எனது தாயார் பெயர் என்ன என்றால் பாஞ்சாலை. எனது அப்பாவிற்கு 2 மனைவிகள் என்று சொன்னால் சரிதான். நான் 2ம் மனைவியின் மகன் என்று சொன்னால் சரிதான், நான் 2ஆவது மனைவின் கடைசி மகன். எனது அப்பாவின் முதல் மனைவியின் பெயர் ராஜாத்தி என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும், முதல் மனைவி ராஜாத்திக்கு பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் சின்னதம்பி, சகாதேவன் என்ற இருவர், அவர்களில் சகாதேவன் இறந்துவிட்டார். சகாதேவனுக்கு மனைவி மற்றும் 2 மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். சகாதேவனின் மனைவி மற்றும் மகன்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோம் என்றால் சரிதான்.

2. எனது அப்பாவிற்கும், முதல்மனைவி ராஜாத்திக்கும் இதுநாள்வரை விவாகரத்து எதுவும் ஆகவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவின் முதல் மனைவி ராாஜாத்தி இன்றும் உயிருடன்தான் உள்ளார் என்று சொன்னால் சரிதான். எனது அப்பா முதல்மனைவி ராஜாத்தி உயிருடன் இருக்கும்போது எனது அப்பா எனது

அம்மாவான பாஞ்சாலியை திருமணம் செய்து கொண்டார் என்று சொன்னால் சரிதான், ஆனால் எனது அப்பாவின் முதல்மனைவி ராஜாத்தி முத்து என்பவரை திருமணம் செய்துகொண்ட பிறகுதான் எனது அப்பா எனது அம்மா பாஞ்சாலியை திருமணம் செய்து கொண்டார். எனது அப்பாவின் முதல்மனைவி ராஜாத்தி முத்து என்பவரை திருமணம் செய்து கொண்டதற்கு ஏதாவது ஆவண்ங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லும் முத்து என்பவரின் மனைவி அலமேலு, நான் சொல்வது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல, அந்த அலமேலு என்பவர் இறந்தபிறகுதான் முத்துவை எனது அப்பாவின் முதல்மனைவி ராஜாத்தி திருமணம் செய்துள்ளார். அலமேலு இறந்த பிறகுதான் முத்து ராஜாத்தியை திருமணம் செய்து கொண்டார் என்பதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பாவின் முதல் மனைவி ராஜாத்தி உயிருடன் இருக்கும்போது எனது அப்பாவிற்கும், ராஜாத்திக்கும் நடந்த திருமணம் சட்டப்படி விவாகரத்து ஆகாத நிலையில் எனது தந்தை எனது அம்மாவான பாஞ்சாலியை திருமணம்செய்து கொண்டது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

3. எனது அப்பாவின் முதல்மனைவி ராஜாத்தியை இந்தவழக்கில் 8ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 8ம் பிரதிவாதி ராஜாத்திக்கு சொத்தில் பாகம் எதுவும் கிடையாது, பார்மல்பார்டியாக தான் அவரை சேர்த்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராஜாத்திக்கும் சொத்தில் பாகம் உண்டு,

அவருக்கு பாகம் இல்லை என்று சொல்லுவது தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது அப்பாவின் 2ம் மனைவியான எனது அம்மாவை 5ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியான எனது அம்மாவிற்கு பாகம் உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவின் முதல்மனைவி ராஜாத்தி உயிருடன் இருக்கும்போது எனது அம்மாவான பாஞ்சாலியை எனது அப்பாவின் 2ம் மனைவி என்பதால்அவருக்கு தாவா சொத்தில் பாகம் எதுவும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 9 முதல் 12 பிரமதிவாதிகளாக சேர்த்துள்ள காசிதங்கம், ஆதிமூலம், தேவா, செல்வி ஆகியோருக்கும் தாவா சொத்தில் பாகம் இல்லை, அவர்களையும் இந்த வழக்கில் ஒரு பார்மல்பார்டியாக தான் சேர்த்துள்ளோம் என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கின் 9 முதல் 12 பிரதிவாதிகள் இந்த வழக்கின் அவசிய தரப்பினர்கள் இல்லை என்ற நிலையில் இந்த வழக்கில் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டிதான் அவர்களை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

4. எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் கேட்டு வருவாய் துறையில் விண்ணப்பித்துள்ளேனா என்றால் நான் விண்ணப்பிக்கவில்லை, 4ம் பிரதிவாதி சின்னதம்பிதான் மனு கொடுத்துள்ளார். அவ்வாறு கொடுக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு வருவாய் துறையில் இருந்து என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நாங்கள் மேற்படி விண்ணப்பத்திற்கு ஒத்துழைப்பு செய்யாததால் சின்னதம்பி வாரிசு சான்றிதழ் கேட்டு அரூர் மாவட்ட

உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் விசாரணை மேற்க்கொண்டு தீர்ப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழ் கேட்டு அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வம்சாவளி விவரங்களும், பாகஉரிமையும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்கும், எனது அம்மாவிற்கும் நடந்த திருமணம் சட்டப்பூர்வம் இல்லாத திருமணம் என்பதால் எனது தந்தைக்கு வரக்கூடிய பாகத்தில்தான் நான் பாகம் தரமுடியும் தவிர மொத்த சொத்தில் பாகம் தரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்துபோன எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால்சரியல்ல.

5. இந்தவழக்கில் சொல்லியுள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. எத்தனை இடத்தில் சொத்துக்கள் உள்ளது என்றால் 6 இடத்தில் உள்ளது. நான் தாவா சொத்தில் எவ்வளவு ஏக்கர் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் ஒன்றரை ஏக்கர். சகாதேவனின் மக்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள் எவ்வளவு நிலம் ஓட்டிவருகிறார்கள் என்றால் அவர்கள் ஓட்டவில்லை, சின்னதம்பிதான் ஓட்டிவருகிறார். 1 முதல் 3 பிரதிவாதிகளின் நிலத்தையும் சின்னதம்பிதான் ஓட்டிவருகிறார் என்றால்

சரிதான். அவ்வாறு ஓட்டும் நிலம் எவ்வளவு என்றால் சுமார் 2 ஏக்கர் இருக்கும். சின்னதம்பி எவ்வளவு நிலம் ஓட்டிவருகிறார் என்றால் சுமார் ஒன்றரை ஏக்கர் நிலம் ஓட்டிவருகிறார். எனது அப்பா செல்லக்கவுண்டர் உயிருடன் இருக்கும்போது வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு, தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான் சின்னபையனாக இருக்கும்போதே தனித்தனியாக பிரித்து கொண்டார்கள் அவ்வாறு பிரித்துக்கொண்ட விவரம் எல்லாம் எனக்கு தெரியாது. ஏற்கனவே பாகப்பிரிவினை செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியாத காரணத்தினால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, ஏற்கனவே பாகப்பிரிவினை செய்தது அவர்களுக்கு தேவையானதை பிரித்துகொண்டார்கள், எனக்கும் கொஞ்சம் கொடுத்துள்ளார்கள் ஆனால் அது சரியாக பிரிக்கவில்லை. எவ்வளவு வருடத்திற்கு முன்பு அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சுமார் 40, 50 வருடத்திற்கு முன்பு பிரித்துக்கொண்டார்கள். 40, 50 வருடத்திற்கு முன்பே வாய்மொழிபாகம் ஏற்பட்டுள்ள நிலையில் மீண்டும் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல, எனக்கு நிலம் குறைவான இருப்பதாலும், எனது அக்காவிற்கும் எதுவும் செய்யாததாலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

6. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்கிறேன். நான் சட்டப்படியான வாரிசுசான்றிதழ் தாக்கல் செய்யாததாலும், சட்டப்படி நான் பாகஉரிமை கேட்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி ஆகக்கூடியது என்றால் சரியல்ல. 1 முதல் 4

பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் நிலத்தை பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆசிரியராக இருப்பதாலும் 1 முதல் 4 பிரதிவாதிகள் படிப்பறிவு இல்லாமல் இருப்பதாலும், அவர்களை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் இந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.02 16:52:27 +0530